
பக்கங்கள் 16 + 05

# மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 சித்திரை 06 வெள்ளிக்கிழமை 19.04.2024 அதிர்வு 263

## கடுமையான வறட்சியால் 11 ஆயிரம் பேர் பாதிப்பு!



இலங்கையில் நிலவும் வறட்சியான காலநிலையால் 3 ஆயிரத்து 646 குடும்பங்களைச் சேர்ந்த 04▶





# தியாக தீபம் அன்னை பூபதியின் 36 ஆம் ஆண்டு நினைவேந்தல்!

## யாழில் திலீபனின் தூபிக்கு முன்பாக நிகழ்வு

(எஸ்.நிதர்ஷன்)

தியாக தீபம் அன்னை பூபதியின் 36 ஆம் ஆண்டு நினைவேந்தலின் இறுதி நாள் நிகழ்வு யாழ்ப்பாணத்தில் இன்று நடைபெற்றது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் நல்லூரில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினைவுத் தூபிக்கு முன்பாகக் கொட்டகை அமைத்து நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது. 02▶





# கண்ணீர் வெள்ளத்துக்கு மத்தியில் விடைபெற்றார் பாலித

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் இராஜாங்க அமைச்சருமான அமரர் பாலித தெவரப்பெருமவின் இறுதிக்கிரியைகள் இன்று நடைபெற்றன.

தான் உயிரிழப்பதற்கு முன்னரே களுத்துறை – மத்துகம பகுதியில் தனக்கான கல்லறையைப் பாலித தெவரப்பெரும அமைத்திருந்தார். அந்த இடத்திலேயே அவரின் பூதவுடல் இன்று பிற்பகல் நல்லடக்கம் செய்யப்பட்டது.

பாலித தெவரப்பெருமவின் பூதவுடலுக்கு ஜனாதிபதி 04▶









# தியாக தீபம் அன்னை பூபதியின் 36 ஆம் ஆண்டு நினைவேந்தல்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்போது பொதுச்சுடர் ஏற்றப்பட்டு மலர்மாலை அணிவிக்கப்பட்டு மலரஞ் சலி செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் அரசியல் கட்சிகளின் உறுப்பினர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பல ரும் கலந்துகொண்டிருந்தனர்.

அன்னை பூபதியின் 36 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு வடக்கு, கிழக்கு மற்றும் புலம்பெயர் தேசங்களிலும் இன்று நடைபெற்று வருகின்றது.

















# மட்டக்களப்பில் அன்னை பூபதியின் சமாதியில் சமயக் கிரியைகளுடன் நினைவேந்தல் நிகழ்வு

**(கனகராசா சரவணன்)**

தியாக தீபம் அன்னை பூபதியின் 36 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு, மட்டக்களப்பு – நாவலடியிலுள்ள அவரது சமாதியில் இன்று நடைபெற்றது.

அன்னை பூபதியின் மகள், உறவினர்கள் மற்றும் அப்போது அவருடன் உண்ணாவிரதத்தில் ஈடுபட்ட அன்னையர் முன்னணித் தலைவி ஆகியோர் சமயக் கிரியைகளுடன் அன்னையின் சமாதிக்கு மலர் தூவி மாலை அணிவித்து சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தினர்.













# நிறைவேற்று அதிகாரம் தொடர வேண்டும்; ஜனாதிபதித் தேர்தலில் ரணிலுக்கே ஆதரவு

## இராஜாங்க அமைச்சர் டயானா தெரிவிப்பு

நாட்டின் தற்போதைய முறைமைக்கமைய நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை அவசியம் என்று இராஜாங்க அமைச்சர் டயானா கமகே தெரிவித்தார். அத்துடன், ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கே தனது ஆதரவு என்றும் அவர் கூறினார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“இந்த நாட்டை மீட்கக் கூடிய ஒருவருக்கே ஜனாதிபதித் தேர்தலில் ஆதரவு வழங்கப்படும். அதனை ரணில் விக்கிரமசிங்க செய்து வருகின்றார். எனவே, அவருக்கு மீண்டும் வாய்ப்பு வழங்கப்பட வேண்டும். மக்கள் ஆணையுடன் அவர் பதவிக்கு வரவேண்டும். நாடாளுமன்ற வாக்கெடுப்பில் ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவு வழங்கியமை மகிழ்ச்சியளிக்கின்றது.

அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி பக்கமே நிற்பேன். ஐக்கிய மக்கள் சக்தி அழைப்பு விடுத்தால்கூட ஏற்கப்போவதில்லை.” - என்றார்.



# வயோதிபர் ஒருவர் வெட்டிப் படுகொலை

வீடொன்றில் வாடகைக்குத் தங்கியிருந்த நபர் ஒருவர், கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு வெட்டிக்கொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் எம்பிலிப்பிட்டிய - மடுவன்வெல பிரதேசத்தில் நேற்று இரவு இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காலி பிரதேசத்தைச் சேர்ந்த 71 வயது நபரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

வாடகை வீட்டில் தனியாக வசித்து வந்த குறித்த நபர், தென்னை நார் உற்பத்தித் தொழில் செய்து வந்தார் என்றும் பொலிஸ் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் எம்பிலிப்பிட்டிய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

வீடொன்றில் வாடகைக்குத் தங்கியிருந்த நபர் ஒருவர், கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு வெட்டிக்கொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் எம்பிலிப்பிட்டிய - மடுவன்வெல பிரதேசத்தில் நேற்று இரவு இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காலி பிரதேசத்தைச் சேர்ந்த 71 வயது நபரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

வாடகை வீட்டில் தனியாக வசித்து வந்த குறித்த நபர், தென்னை நார் உற்பத்தித் தொழில் செய்து வந்தார் என்றும் பொலிஸ் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் எம்பிலிப்பிட்டிய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# அருட்தந்தை சிறில் காமினி சி.ஐ.டியில் இன்று முன்னிலை

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் விசாரிப்பதற்காகக் கொழும்பு பேராயர் இல்லத்தின் ஊடகப் பேச்சாளர் அருட்தந்தை சிறில் காமினி குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையாகியுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பான உண்மைகளை விசாரிப்பதற்க ாக அவர் மீண்டும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு அழைக்கப்பட்டிருந்த நிலையில், இன்று குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையாகியுள்ளார்.



# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**கடுமையான...**

11ஆயிரத்து 413 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

அனர்த்த முகாமைத்துவ நிலையம் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

கம்பஹா மாவட்டத்திலேயே அதிகளவான குடும்பங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய கம்பஹா மாவட்டத்தில் மாத்திரம் 2 ஆயிரத்து 487 குடும்பங்களைச் சேர்ந்த 7 ஆயிரத்து 461 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.அதேநேரம் வறட்சியான காலநிலை காரணமாக கேகாலை மாவட்டத்தில் 2 ஆயிரத்து 813 பேரும், கிளிநொச்சி மாவட்டத்தில் 949 பேரும், பதுளை மாவட்டத்தில் 190 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**கண்ணீர் வெள்ளத்துக்கு...**

ரணில் விக்கிரமசிங்க, மைத்திரிபால சிறிசேன, மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட முன்னாள் ஜனாதிபதிகள், அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் மனோ கணேசன், எம்.ஏ.சுமந்திரன் உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், பெருந்திரளான மக்கள் இன்று கண்ணீருடன் அஞ்சலி செலுத்தினர்.



# கல்முனை மாநகர கணக்கறிக்கை பொது மக்கள் பார்வையிட ஏற்பாடு!

(அஸ்லம் எஸ்.மௌலானா)

கல்முனை மாநகர சபையின் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கான இறுதிக் கணக்கறிக்கைகள் மாநகர சபையின் புதிய கணக்காளர் வை. ஹபீபுல்லாஹ்வால் மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம். அஸ்மியிடம் புதன்கிழமை (17) கையளிக்கப்பட்டுள்ளன.

கடந்த காலங்களில் கல்முனை மாநகர சபையின் வருடாந்த இறுதிக் கணக்கறிக்கைகள் தயாரிப்பதில் நிலவி வந்த குறைபாடுகள் காரணமாக அவை முறையாக நிறைவு செய்யப்படாமல் இருந்து வந்தன.

இந்த நிலையில் மாநகர சபையின் பதில் கணக்காளராக நியமிக்கப்பட்ட வை. ஹபீபுல்லாஹ், கடந்த பெப்ரவரி மாதம் 26 ஆம் திகதியன்று தனது கடமைகளைப் பொறுப்பேற்ற கையோடு மாநகர ஆணையாளரின் ஆலோசனையின் பேரில் மேற்கொண்ட துரித நடவடிக்கைகள் காரணமாக இறுதிக் கணக்குகள் தயாரிப்பதில் நிலவி வந்த குறைபாடுகள் யாவும் நிவர்த்தி செய்யப்பட்டன. அதன் அடிப்படையில் குறுகிய காலத்தினுள் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கான இறுதிக் கணக்கறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

கடந்த காலங்களில் இறுதிக் கணக்குகள் முறையாகத் தயாரிக்கப்படாமை காரணமாக ஏற்பட்டிருந்த சிக்கல்களை உடனடியாக நிவர்த்தி செய்யும் வகையில் மிகக் குறுகிய காலத்தினுள் நிதிப் பிரிவு அலுவலர்களின் ஒத்துழைப்புடன் இவை தயாரிக்கப்பட்டுள்ளன என்று கணக்காளர் வை. ஹபீபுல்லாஹ் தெரிவித்தார்.

இவற்றைப் பார்வையிடவும் இவை தொடர்பான விளக்கங்கள் பெறுவதற்கும் கல்முனை மாநகர வாழ் பொது மக்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.







# விளையாட்டுக் கழகத்துக்கு சீருடைகள் அன்பளிப்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகத்தின் பெண்கள் அணிக்கான சீருடைகள் வழங்கி வைக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

அமரர்களான அழகரத்தினம் சுலைக்சனா, சீனியன் தங்கவேலு, தங்கவேலு சீதாலட்சுமி ஆகியோரின் ஞாபகார்த்தமாக அவர்களது மகன் ஞானசீலன் இந்தச் சீருடைகளை அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

இந்த நிகழ்வில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழக பெண் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## காதில் பூ வைக்கும் ஜே.வி.பி.

மரம் பழுத்தால் வௌவால்கள் தேடி வரும். அது இயற்கையின் வழமை.

இப்போது தேர்தல் காலம். வாக்குப் பழங்களை வேட்டையாடுவதற்காக வேட்பாளர் வௌவால்கள் படையெடுப்பதும் தவிர்க்க முடியாத நியதிதான்.

இந்தத் தேர்தலில் வென்று விடலாம் என்ற நப்பாசையில் இருக்கும் ஜே.வி.பி. உட்பட்ட தேசிய மக்கள் சக்தியின் பிரமுகர்களுக்கும் தமிழ் வாக்குகள் மீது கண். அதனால் தமிழ் மக்கள் மீது அவர்களுக்குத் திடீர் கரிசனை வந்துவிட்டது.

தமிழ் மக்களைத் தேடி வருகின்றார்கள். தமிழர் தரப்புடன் உரையாட எத்தனிக்கின்றார்கள். எல்லோருக்கும் சமதையான நீதியும் தீர்வும் கௌரவ வாழ்வும் என்று சாத்தான் வேதம் வேறு ஓதுகின்றார்கள்.

எல்லாமே தமிழரிடம் மிஞ்சி இருக்கும் ஜனநாயக வாக்குப்பலத்தையும் சூறையாடும் எத்தனம்தான். வேறில்லை.

தமிழ் மக்களின் ஒற்றைத் தாயகமான வடக்கையும் கிழக்கையும் ஐக்கியப்படுத்தி வைத்திருக்கும் ஏற்பாட்டை இலங்கை - இந்திய ஒப்பந்தம் தற்காலிகமாகவேனும் செய்திருந்தது.

நீதிமன்றத்துக்குப் போய் அதை பிரித்தவர்கள் - தமிழர் தாயகத்தைத் துண்டு போட்டவர்கள் - இந்த ஜே.வி.பினர்தான்.

நாட்டின் ஐக்கியம் என்று வலியுறுத்தியவர்கள், அந்த நாட்டுக்குள் ஓரின மக்களின் தாயகத்தைத் துண்டாட வைத்து, பிரித்தாளும் நரித் தந்திரத்தை முன்னெடுத்த போக்கிரி அரசியல் சக்திகள்தான் ஜே.வி.பி.

அக்கட்சியின் சார்பில் ஜனாதிபதிக் கனவு என்ற நப்பாசையுடன் இருக்கும் வேட்பாளர் அநுரகுமார திஸநாயக்கவிடம் இது குறித்து ஓரிரு தினங்களுக்கு முன்னர் நடந்த ஒரு செவ்வி நிகழ்ச்சியில் கேட்கப்பட்டது.

13 ஆம் திருத்தத்தின் கீழ் இந்த வடக்கு - கிழக்கு இணைப்பு ஒரு வருடத்திற்கு மட்டுமே வழங்கப்பட்டது என்று வியாக்கியானம் கூறினார் அநுரகுமார.

ஆயினும், அனைத்து ஜனாதிபதிகளினாலும் அது காலத்துக்குக் காலம் - வருடம் தோறும் - நீடிக்கப்பட்டது. அது அரசியல் சாசனத்தை மீறிய செயல், அதனால் நீதிமன்றத்திற்குச் சென்றோம் என்று ஒரு சளாப்பல் பதில் சொன்னார் அநுரகுமார.

அரசமைப்புச் சட்ட மீறல் இடம்பெற்ற போதெல்லாம் தாங்கள் நீதிமன்றத்திற்குத் தவறாது சென்றார்கள் என்று கூறி, பல்வேறு உதாரணங்களையும் முன்வைத்தார் அவர்.

மக்கள் - குறிப்பாக தமிழ் மக்கள் - சட்ட அறிவு அற்றவர்கள் என்று நினைத்துக் கொண்டுதான் இவ்வாறு பதிலளித்து காதில் பூச்சூற்ற எத்தனிக்கிறார் போலும் அவர்.

ஒவ்வொரு வருடமும், வடக்கு - கிழக்கு இணைப்புப் பிரகடனம் நீடிக்கப்பட்டது உண்மைதான். ஆனால் அது அரசமைப்பில் உள்ள ஏற்பாடு. அப்படி இணைப்பு நீடிப்பது அரசமைப்பு மீறலே அல்ல. இணைப்பு தவறு என்றோ அதை நீடிக்கும் விதத்தில் வருடாவருடம் கொடுக்கப்படும் பிரகடனம் தவறு என்றோ உயர் நீதிமன்றம் தீர்ப்பளிக்கவில்லை. வடக்கையும் கிழக்கையும் இணைக்கும் மூலப் பிரகடனத்தை ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தனா விடுத்த ஏற்பாட்டில் - ஒழுங்கு முறையில் - தொழில்நுட்பத் தவறு இருப்பதாகவே நீதிமன்றம் தெரிவித்தது. அதை மூடி மறைத்து இப்போது பதில் கூறுகின்றார் அநுரகுமார.

அது மாத்திரமல்ல, அரசமைப்பு ஏற்பாடுகள் மீறப்பட்ட போதெல்லாம் அதற்கு எதிராகத் தாங்கள் நீதிமன்றம் சென்றவர்கள் என்று கூறி, ஏதோ அரசமைப்பின் காவலர்கள் போல தங்களைக் காட்டிக் கொள்ள முயல்கின்றனர் அவர்கள்.

அரசமைப்பின் படி, 35 வருடங்களுக்கு முன்னர் அரசமைப்புக்கு கொண்டுவரப்பட்டு, இன்றும் நாட்டின் மீயுயர் சட்டமான அரசமைப்பில் தெளிவாக உள்ள 13 ஆவது திருத்தத்தின் பிரகாரம், மாகாணங்களுக்கான பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் இன்னும் மாகாணங்களுக்கு வழங்கப்படவேயில்லை. இது அரசமைப்பு நடைமுறையாக்கத்துக்கு எதிரான நடவடிக்கை. அவற்றை வழங்க மறுத்து அடம்பிடித்து நிற்கும் ஆளும் தரப்புகளுடன் இவ்விடயத்தில் ஒட்டி நிற்கின்றது ஜே.வி.பி.

அரசமைப்புக்காக - அரசமைப்பு ஏற்பாடுகளை நிலை நிறுத்துவதற்காக - எப்போதும் குரல் கொடுப்பவர்கள், அதற்காக நீதிமன்றங்களுக்குச் சென்று நியாயம் கேட்பவர்கள் என்று தங்களைத் தாங்களே புளுகிக் கொள்ளும் ஜே.வி.பி. புளுகு மூடைகள், இந்த அரசமைப்பு ஏற்பாடுகள் நடைமுறையாக்கப்படாமல் இருப்பதை ஆட்சேபித்து எப்போதாவது குரல் எழுப்பினார்களா? எந்த நீதிமன்றத்துக்காவது போனார்களா?

ஆக, தமிழர் காதில் பூ வைக்கும் வேலையை ஜே.வி.பி. இத்துடன் நிறுத்திக் கொள்வது நல்லது.

# கிளிநொச்சியில் இன்று நடைபெற்றது அன்னை பூபதியின் நினைவேந்தல்!

தியாகத்தாய் அன்னை பூபதியின் 36 ஆவது ஆண்டு நினைவேந்தல், இன்று (19) காலை கிளிநொச்சியில் கடைப்பிடிக்கப்பட்டது.

இலங்கைத் தமிழரசுக் கட்சி, கிளிநொச்சி மாவட்டக் கிளையின் ஏற்பாட்டில், கிளிநொச்சி சேவைச் சந்தை முன்றலில், அடையாள உண்ணா விரதத்துடன் ஆரம்பமாகி, நினைவு உரைகளோடு நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில், நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், உள்ளுராட்சி மன்றங்களின் மேனாள் தவிசாளர்கள், உபதவிசாளர்கள், உறுப்பினர்கள், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்டக் கிளையினர், தமிழ்த் தேசிய உணர்வாளர்கள் மற்றும் பொது மக்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.














# திருமலை குளக்கோட்டன் மண்டபத்தில் அன்னை பூபதியின் நினைவு நிகழ்வு!

(ஹஸ்பர்)

அன்னை பூபதியின் 36 ஆவது நினைவு தினம் இன்று (19) திருகோணமலை குளக்கோட்டன் மண்டபத்தில் இடம்பெற்றது.

அஞ்சலி நிகழ்வை திருகோணமலை ஒன்றிணைந்த சமூக செயற்பாட்டாளர்கள் இணைந்து ஏற்பாடு செய்திருந்தனர்.

இதில் சமூக ஆர்வலர்கள் கலந்து கொண்டு சுடரேற்றி அஞ்சலி செலுத்தினர்.

நினைவஞ்சலி நிகழ்வில் பெரும் திரளான மக்கள் கலந்து கொண்டு மெழுகுவர்த்தி ஏற்றி அஞ்சலி செலுத்தினர் .







# தமிழரசுக்கட்சியின் திருகோணமலை அலுவலகத்தில் பூபதிக்கு அஞ்சலி!

(ஹஸ்பர் ஏ.எச்.)

அன்னை பூபதியின் 36 ஆவது நினைவு நாள் நிகழ்வு இன்று 19 ஆம் திகதி இலங்கைத் தமிழரசுக் கட்சியின் திருக்கோணமலை மாவட்டப் பணிமனையில் மாவட்டத் தலைவர் சண்முகம் குகதாசன் தலைமையில் நடைபெற்றது.

இதில் கட்சியின் நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர் கலந்து கொண்டு சுடரேற்றி அஞ்சலி செலுத்தினர்.



# சிங்கள மொழி சான்றிதழ் வழங்கல்!

(வி.ரி.சகாதேவராஜா)

நீதி அமைச்சின் தேசிய ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டுக்கான செயலகத்தின் அனுசரணையுடன் திருக்கோவில் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற இளைஞர் யுவதிகளுக்கான 100 மணித்தியாலங்கள் கொண்ட சிங்கள மொழித் தொடர்பாடல் பயிற்சி பாடநெறியை பூர்த்தி செய்தோருக்கான சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

திருக்கோவில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன் வழிகாட்டலின் கீழ் உதவிப் பிரதேச செயலாளர் திருமதி எஸ். நிருபா தலைமையில் தேசிய ஒருமைப்பாட்டு இணைப்பாளர் ஏ.ஆன்ஸி யுரேமினியின் ஒருங்கிணைப்பில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பாடநெறியின் வளவாளரான சுதேஷ் ருஷாந்தன் மற்றும் பாடநெறியை பூர்த்தி செய்த இளைஞர் யுவதிகள் கலந்து கொண்டனர்.



# அட்டாளைச்சேனை செயலகத்தில் சர்வமத பண்டிகை நிகழ்வுகள்

(எம். எப். நவாஸ் )

தமிழ், சிங்கள புத்தாண்டு மற்றும் ரமழான் பண்டிகையை முன்னிட்டு அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் சர்வமத நல்லிணக்க விஷேட விருந்துபசார நிகழ்வு நேற்று முன்தினம் (17) நடைபெற்றது.

சகவாழ்வு மற்றும் நல்லிணக்கத்தை வெளிப்படுத்தும் வகையில் இந்தப் பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் மூவினங்களையும் சேர்ந்த உத்தியோகத்தர்கள் இணைந்து இந்த விருந்து உபசார நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தனர்.

அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் பி. ரீ. எம்.இர்பான் தலைமையிலும் உதவிப் பிரதேச செயலாளர் எப்.நஹீஜா முஷாபிர் வழிகாட்டலிலும் தேசிய ஒருமைப்பாட்டு அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ எம் எம்.றிஸான் மற்றும்கலாச்சார உத்தியோகத்தர்களின் ஒருங்கிணைப்பிலும் நடைபெற்ற நிகழ்வில் பாரம்பரிய உணவு வகைகளை மூவினங்களையும் சேர்ந்த உத்தியோகத்தர்கள் பரிமாறி மகிழ்ந்தனர்.



# ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகம் மட்டக்களப்பு குருக்கள் மடத்தில்!

(பழுவூரான்)

ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் மட்டக் களப்பு மாவட்ட பிரதான செயலாளர் அலுவலகம் மட்டக்களப்பு குருக்கள்மடம் பிரதான வீதியில் நேற்று முன்தினம் புதன்கிழமை (17) மாலை திறந்து வைக்கப் பட்டுள்ளது.



ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் மட்டக் களப்பு மாவட்ட பிரதான செயலாளர் ஜோன் கெனத் தலைமையில் நடைபெற்ற இந்த நிழ்வில், அந்தக் கட்சியின் குரு ணாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார மற்றும் மாவட்ட தலை வரும் முன்னாள் பிரதியமைச்சருமான சோ.கணேசமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டு அலுவலகத்தைத் திறந்து வைத்தனர்.

இதன்போது கலந்து கொண்டிருந்த ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டாரவிடம் தமது கோரிக்கை அடங்கிய மகஜர் ஒன்றையும் குருக்கள்மடம் பொது அமைப்பினர் வழங்கி வைத்தனர்.

அந்தப் பகுதியைச் சேர்ந்த கட்சியின் ஆதரவாளர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொது மக்கள் எனப் பலர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு அரிசி விநியோகிப்பதற்கு நடவடிக்கை

(சர்ஜுன் லாபீர்)

2023 ஆம் ஆண்டின் முதல் அரை யாண்டில் நாட்டில் நிலவிய மிகவும் கடினமான பொருளாதார நிலைமைக்கு மத்தியில் பாதிப்புக்கு உள்ளான குறைந்த வருமானம் பெறும் குழுக்க ளின் ஊட்டச்சத்து மட்டத்தைப் பேணு வதற்கு ஆதரவு வழங்கி அந்த மக்க ளைப் பாது காக்கும் நோக்கத்துடன் அரிசி விநியோகிக்க நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளது.

முழு நாட்டையும் உள்ளடக்கும் விதமாகக் குறைந்த வருமானம் பெறும் சுமார் 2.74 மில்லியன் குடும்பங்களுக்கு ஒரு குடும்பத்துக்கு ஒரு மாதத்துக்குப் 10 கிலோ நாட்டு அரிசியை இரண்டு மாத காலத்துக்கு வழங்குவதற்கு நடவ டிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த வேலைத் திட்டம் தேசிய ரீதியாக எதிர்வரும் 21 ஆம் திகதி ஜனா திபதி தலைமையில் ஆரம்பிக்கப்பட வுள்ளது.

சம்மாந்துறை பிரதேச செயலக பிரி வில் சுமார் 12 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு அரிசி விநியோகம் மேற்கொள்ளப்படவுள்ளது.

இது விடயமாக கிராம மட்ட உத்தியோ கத்தர்களுக்கான தெளிவுபடுத்தும் முன் னாய்வு கூட்டம் நேற்று (18) சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம் முஹம்மது ஹனீபா தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் யூ.எல். அஸ்லம், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் கலாநிதி ஏ.எல். எம். அஸ்லம், சமூர்த்தி முகாமையாளர், விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர், கிராம சேவகர்கள், பொருளாதார அபி விருத்தி உத்தியோகத்தர்கள், சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், அரிசி ஆலை உரிமையாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



# புறக்கோட்டையில் அனுமதியற்ற கடைகள்; பின்னணியில் இயங்கும் கடத்தல்காரர்கள்!

## கொழும்பு மாநகர அழகுபடுத்தல் திட்ட இணைப்பாளர் தகவல்

கொழும்பு புறக்கோட்டையில் அனுமதியற்ற விதத்தில் கடைகளை நிர்மாணிப்பதன் பின்னணியில் ஒழுங்கமைக்கப்பட்ட கடத்தல்காரர்கள் குழுவொன்று உள்ளது என்று கொழும்பு மாநகர சபை மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

கொழும்பு மிதக்கும் சந்தைக்கு முன்பாக இடிக்கப்பட்டுள்ள 21 கடைகளும் கடத்தல்காரர்களால் கட்டப்பட்ட சட்டவிரோத கட்டுமானங்களே என்று கொழும்பு மாநகரசபையின் நகர அழகுபடுத்தல் திட்ட இணைப்பாளர் பொறியியலாளர் குமுது போகஹவத்த தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடத்தல்காரர்கள் கடைகளை தினசரி வாடகைக்கு வேறு நபர்களுக்குக் குத்தகைக்கு விட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சட்டவிரோத கட்டுமானம் குறித்து முதன்முறையாக முறைப்பாடு கிடைத்தால் அதனை அகற்றுவதற்கு மாநகர சபை நடவடிக்கை எடுக்கும்.

எனவே இவ்வாறான ஒழுங்கமைக்கப்பட்ட கடத்தல்காரர்களுக்கு இரையாகிப் பணத்தை வீணடிக்க வேண்டாம்.

அனுமதி பெறாத கடைகளை அகற்றும் முன், கடை உரிமையாளர்களுக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான முதல் அறிவிப்பு கடந்த ஆண்டு டிசெம்பர் 20 ஆம் திகதி நகர அபிவிருத்தி அதிகாரசபையால் வெளியிடப்பட்டது.

அதனையடுத்து, கடந்த ஜனவரி 2 ஆம் திகதி அனைத்துக் கடை உரிமையாளர்களுக்கும் 14 நாள்களுக்குள் கடைகளை அகற்றுமாறு கொழும்பு மாநகர சபை எழுத்து மூலம் அறிவித்தல் விடுத்துள்ளது.

பல தடவைகள் இந்தக் கடைகளின் உரிமையாளர்களை அவ்விடத்தை விட்டு வெளியேறுமாறு வாய்மொழி அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

ஆனால் குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் அகற்றப்படாமையால் இந்த அனுமதியற்ற கடைகளை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டது.

எதிர்காலத்தில் இந்த கடைகளை அவற்றிலிருந்து அகற்றுவதற்கு நகர சபையால் செலவிடப்படும் பணத்தை மீளப்பெற நடவடிக்கை எடுக்கப்படும்.- என்றார்.

இந்த இடத்தில் 73 சட்டவிரோத கடைகள் கட்டப்பட்டுள்ளன. 2013 ஆம் ஆண்டும் அகற்றப்பட்டு, கொழும்பு பஸ்தியன் மாவத்தை மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதி மக்கள் அகற்றப்பட்டு அதனைக் கவர்ச்சிகரமான முறையில் அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று நகர அபிவிருத்தி அதிகார சபையின் மேலதிக பணிப்பாளர் நாயகம் மகிந்த விதானாராச்சி தெரிவித்தார்.

கடந்த 2013 ஆம் ஆண்டு இந்த இடத்தில் கட்டப்பட்ட சட்ட விரோதக் கடைகளை நாங்கள் அகற்றிய பின்னர், கடந்த கொவிட் மற்றும் போராட்டத்தின் போது சில ஒழுங்கமைக்கப்பட்ட நபர்கள் வெவ்வேறு காலங்களில் மிதக்கும் சந்தையின் முன் கடைகளைக் கட்டியுள்ளனர். அவர்களை அந்த இடத்தை விட்டு செல்லுமாறு அறிவித்தும் அவர்கள் அங்கிருந்து செல்லாத காரணத்தால் இந்தக் கடைகளை அகற்றுமாறு நகர அபிவிருத்தி அதிகார சபை கொழும்பு மாநகர சபையிடம் கோரிக்கை விடுத்தது.

கொழும்பு மெனிங் சந்தையில் மாத்திரம் 231 அனுமதியற்ற கடைகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. கடைகளை அகற்றுவதை ஏற்றுக் கொண்ட போதிலும், கொழும்பு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவில் கடைகளை அகற்றுவது குறித்து ஆலோசிக்க உப குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கொழும்பு மிதக்கும் சந்தை ஜப்பானிய முதலீட்டாளர் ஒருவருக்கு வழங்கப்படவுள்ளது என்று செய்திகள் வெளியாகியுள்ள போதிலும், இது தொடர்பில் இதுவரை இணக்கப்பாடு எட்டப்படவில்லை என நகர அபிவிருத்தி அதிகார சபையின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் ஈ.ஏ.சி.பிரியசாந்த தெரிவித்தார்.

ஆனால் இந்த திட்டத்தின் மதிப்பு குறித்து அடிப்படை புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகி உள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், இந்த சந்தை வளாகத்தை அகற்றியதற்கும், மிதக்கும் வணிக வளாகத்தை ஜப்பானிடம் ஒப்படைப்பதற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றும் தெரிவித்தார்.

மக்கள் நினைக்கும் வகையில் அனுமதியற்ற கட்டுமானங்களை மேற்கொள்ளச் சட்டத்துக்கு எந்த உரிமையும் இல்லை. இந்த அனுமதியற்ற கட்டுமானங்களை ஒழுங்கமைக்கப்பட்ட கடத்தல்காரர்கள் அநியாயமாக பயன்படுத்திக் கொள்கின்றனர் எனவும் பிரதிப் பணிப்பாளர் நாயகம் மேலும் தெரிவித்தார்.

### செம்மணியில் துடுப்பாட்ட மைதானம் அமைந்தால்

# அயல்கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கும்; கோடையில் கடும் நீர்ப்பஞ்சமும் ஏற்படும்!

### இப்படி எச்சரிக்கை விடுக்கிறார் ஐங்கரநேசன்!!



செம்மணியில் முன்னர் உப்பளம் இருந்த பகுதியில் சர்வதேசத் துடுப்பாட்ட மைதானம் ஒன்றை அமைப்பதற்கான பகீரதப் பிரயர்த்தன முயற்சியில் நகர அபிவிருத்தி அதிகார சபை ஈடுபட்டுள்ளது.

ஏற்கனவே செம்மணியில் கட்டுமனங்களை மேற்கொள்வதற்குப் பல்வேறு தரப்பினராலும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டபோது வடக்கு மாகாணசபை அவற்றை நிராகரித்திருந்தது.

தற்போது வடக்கு மாகாண சபையில் மக்கள் பிரதிநிதித்துவம் இல்லாத நிலையில் செம்மணியில் சர்வதேச தரத்தில் துடுப்பாட்ட மைதானம் ஒன்றை அமைப்பதற்கான முயற்சிகள் சாதக பாதகங்களை ஆராயாது முடுக்கி விடப்பட்டுள்ளன.

செம்மணியில் இத் துடுப்பாட்ட மைதானம் அமைந்தால் அயல் பிரதேசங்கள் மாரியில் வெள்ளத்தில் மூழ்கும் அபாயமும் கோடையில் கடும் நீர்ப்பஞ்சத்துக்கு ஆளாகும் அபாயமும் நேரிடும்.

இவ்வாறு தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் எச்சரித்துள்ளார்.

செம்மணியில் சர்வதேசத் தரத்திலான துடுப்பாட்ட மைதானத்தை அமைப்பதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளமை தொடர்பாக பொ. ஐங்கரநேசன் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு எச்சரித்துள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு,

செம்மணி உப்பளப் பகுதிக் குடாநாட்டின் பிரதான கடல் நீரேரிகளில் ஒன்றான உப்பாற்றுக் கடல் நீரேரியை அண்டிய தாழ்வான நிலம் ஆகும். வெளிப் பார்வைக்கு முக்கியத்துவமற்ற வெட்டவெளியாகத் தென்படும் இந்தப் பகுதி சூழலியல் ரீதியாக இன்றிமையாத பங்களிப்புகளை வழங்கி வருகிறது.

மாரியில் சுற்றயல் கிராமங்களில் இருந்துவரும் வெள்ள நீரைத் தேக்கி வைத்து நிலத்தடி நீர் மட்டத்தைப் பேணுவதோடு, நிலம் உவராவதையும் தடுக்கிறது. கூடவே மேலதிக நீரைக் குடாநாட்டின் இன்னுமொரு கடல்நீரேரியான யாழ்ப்பாணக் கடல் நீரேரி வழியாகக் கடலுக்குள் அனுப்புவதன் மூலம் குடியிருப்புகளையும் வயல் நிலங்களையும் வெள்ளத்தில் மூழ்காமல் பாதுகாக்கவும் செய்கிறது.

அபிவிருத்தி முதலீட்டாளர்களின் வசதிகளையும் நலன்களையும் மாத்திரமே கருத்தில் கொள்வதாயின் அது நிலைபேறானதாக ஒருபோதும் அமையாது. அபிவிருத்தியில் சுற்றுச் சூழலினதும் அது சார்ந்த சமூகத்தினதும் நலன்கள் முன்னுரிமை பெறும்போதே அது நீடித்த – நிலையான – அபிவிருத்தியாக அமையும்.

அந்த வகையில் யாழ். நகரின் நுழைவாசல் என்பதற்காக மாத்திரமே செம்மணியில் துடுப்பாட்ட மைதானத்தை அமைப்பதற்கு முற்படுவது எவ்வகையிலும் ஏற்புடையது அல்ல. இதனை இதுவரையில் அபிவிருத்திகள் எதனையும் காணாத தீவகத்தின் பகுதிகளில் ஒன்றில் நிறுவுவதே சாலச்சிறந்தது ஆகும் .– என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சித்திரைக் கலை விழா!

(அபு அலா )

திருக்கோணமலை மாவட்ட தமிழ் அமுதம் கலைவட்டம் நடத்தும் சித்திரைக் கலை விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை (21) காலை 9 மணிக்கு திருகோணமலை நகர சபை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

தமிழ் அமுதம் கலைவட்டத்தின் தலைவரும் அதிபருமான திருமதி சுஜந்தினி யுவராஜா தலைமையில் "தமிழ் மணம் வீசட்டும்" எனும் தொனிப் பொருளில் இடம்பெறவுள்ள இந்த சித்திரைக் கலை விழாவுக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் உதவிச் செயலாளர் திருமதி த.வருணி மற்றும் தம்பலகாமம் பிரதேச செயலாளர் திருமதி ஜெ.ஸ்ரீபதி ஆகியோர் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளனர்.

ஊடகவியலாளரும் எழுத்தாளருமான திருமதி ஜெ.நித்தியானந்தன், ஓய்வுநிலை அதிபர்களான க.ஜெயநாதன், ப.மதிபாலசிங்கம், ந.நவரெத்தினராஜா, கெ.சித்திரவே லாயுதம் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகக் கலந்து கொள்வர்.



# நவீன முறையிலான விவசாயச் செய்கை முன்னெடுப்பது பற்றிக் கலந்துரையாடல்

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் எதிர்வரும் நாள்களில் நவீன முறையிலான விவசாய செயற்பாடுகளை முன்னெடுப்பது தொடர்பான கலந்துரையாடல் கூட்டமொன்று மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரன் தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் (17) இடம்பெற்றது.

மாவட்டத்தில் புதிய தொழில் நுட்பத்தை நடைமுறைப்படுத்துவதற்காக மாவட்ட வர்த்தக கைத்தொழில் மற்றும் விவசாய சம்மேளனத்தால் பல முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்ட நிலையில் ஏப்ரல் 16 சர்வதேச விவசாயிகள் புரட்சிகள் தினத்தன்று நிகழ்வு துறைசார்ந்த அதிகாரிகள் மற்றும் நிபுணர்களின் பங்களிப்புடன் நடைபெற்றது.



நெல் நாற்று நடுகையில் நாம் எதிர்நோக்கும் சவால்களும் நவீன தொழில்நுட்ப இயந்திரங்களின் பங்களிப்பும், இலங்கையில் வர்த்தக விவசாயத் துறையை நவீனமயப்படுத்தலில் உள்ள சவால்கள், இயந்திரத்தின் மூலம் நாற்றுகளை நடுதல், ஆளில்லா விமானங்கள் , செயற்கை நுண்ணறிவை பயன்படுத்தல், மாற்று சக்தி வளங்களை பயன்படுத்தல் போன்ற விடயங்கள் தொடர்பாக துறைசார்ந்த நிபுணர்கள் மூலமாக மாவட்ட விவசாயிகளுக்கு தெளிவுபடுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட வர்த்தக கைத்தொழில் விவசாய சம்மேளத்தின் பேராசிரியர் ஜயசிங்கம், மாவட்ட விவசாய பணிப்பாளர் எம். எப். ஏ. ஸனிர், மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர், பிரதேச செயலாளர்கள், ஏனைய பிரதித் திட்டமிடல் பணிப்பாளர்கள், திணைக்களத் தலைவர்கள், விவசாய அமைப்பினர்கள், தொழில் முயற்சியாளர்கள் என பலர் கலந்து கொண்டனர்.





# அக்கரைப்பற்று ஆஸ்பத்திரியில் சர்வ மத பண்டிகை நிகழ்வுகள்

(சியாத். எம். இஸ்மாயில்)

தமிழ், சிங்கள புத்தாண்டு மற்றும் ரமழான் பண்டிகையை முன்னிட்டு அக்கரைப்பற்று ஆதார வைத்திய சாலையில் சர்வமத நல்லிணக்க விஷேட விருந்துபசார நிகழ்வு நேற்று வியாழக்கிழமை நடைபெற்றது.

சகவாழ்வு மற்றும் நல்லிணக்கத்தை வெளிப்படுத்தும் வகையில் வைத்தியசாலை அலுவலகத்தில் கடமையாற்றும் மூவினங்களையும் சேர்ந்த உத்தியோகத்தர்கள் இணைந்து இந்த விருந்து உபசார நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தனர்.

இந்த நிகழ்வில் வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் டாக்டர்.ரீ.எஸ். ஆர்.ரீ.ஆர்.றஜாப் மற்றும் தர முகாமைத்துவ அலகின் பொறுப்பு வைத்தியர் டாக்டர் எம்.எச்.எம். சனூபர், திட்டமிடல் பொறுப்பு வைத்தியர் டாக்டர். எம்.எம். தாஸிம், தாதிய பரிபாலகர் பி.ரீ. நௌபர், கணக்காளர் பி. புனிதராஜ், நிர்வாக உத்தியோகத்தர் கே. விஜயகுமார், பிரதம சுகாதார முகாமைத்துவ உதவியாளர்களான எஸ்.எல்.சாதீக், எம்.பி.எம். சைபுல்லாஹ், அலுவலக உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் கலந்து கொண்டனர். பாரம்பரிய உணவு வகைகளை மூவினங்களையும் சேர்ந்த உத்தியோகத்தர்கள் பரிமாறி மகிழ்ந்தனர்.



# மார்ச் 12 இயக்கத்தின் மக்கள் மேடை நிகழ்வு

(கற்பிட்டி சியாஜ்)

புத்தளம் மாவட்ட மார்ச் 12 இயக்கத்தின் ஏற்பாட்டில் அரசியல் தலைவர்களுக்கும் மக்களுக்கும் இடையே முக்கியமான கருத்துப் பரிமாற்றத்துக்கான “மக்கள் மேடை” நிகழ்வு நேற்று வியாழக்கிழமை (18) காலை புத்தளம் மர்ஹூம் கே.ஏ.பாயிஸ் ஞாபகார்த்த கேட்போர் கூடத்தில் “தூய்மையான அரசியலுக்காக ஒன்றிணைவோம்” என்ற கருப்பொருளை மையப்படுத்தி இடம்பெற்றது.

மார்ச் 12 இயக்கத்தின் புத்தளம் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் முஹம்மது ருமைஸ் தலைமையில், தேர்தல் வன்முறைகளை கண்காணிக்கும் நிலையத்தின் நிறைவேற்று பணிப்பாளர் மஞ்சுள கஜனாயக்கவின் நெறிப்படுத்தலில் நடைபெற்ற இந்த நிகழ்வில் புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிந்தக அமல் மாயாதுன்ன,நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீமின் செயலாளர் முஹம்மது நௌபல், தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்று குழு உறுப்பினர், நாடாளுமன்ற உறுப்பினர் ஜகத் பிரியங்கரவின் புத்தளம் தொகுதி இணைப்பாளர், சமய தலைவர்கள், சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள், சமூக ஆர்வலர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

அரசியல் பிரமுகர்களின் எதிர்கால திட்டங்கள் தொடர்பான கருத்துரைகளை தொடர்ந்து பொது மக்களின் கேள்விகள் நேரடியாக அரசியல் பிரமுகர்களிடம் முன்வைக்கப்பட்டு கேள்விகளுக்கான பதில்கள் வழிகாட்டல்கள் வழங்கப்பட்டன.





# கட்சி தலைவர்களும், நடிகர்களும் இன்று நேரத்துடன் வாக்களித்தனர்



தமிழகத்தில் காலை முதலே அரசியல் கட்சி தலைவர்களும், நடிகர்களும் வாக்களித்து வருகின்றனர்.

நடிகர் அஜித்குமார் தனது வாக்கினை செலுத்த சென்னை திருவான்மியூரில் உள்ள வாக்குச்சாவடிக்கு வாக்குப்பதிவு தொடங்குவதற்கு 20 நிமிடங்களுக்கு முன்பே வருகை தந்து வாக்களித்தார்.

மக்களவை தேர்தல் இன்று நாடு முழுவதும் உள்ள 21 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் உள்ள 102 தொகுதிகளில் வாக்குப்பதிவு தொடங்கி நடைபெற்று வருகிறது.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள 40 தொகுதிகளுக்கும் வாக்குப்பதிவு இன்று காலை 7 மணிக்கு தொடங்கி விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

வாக்குப்பதிவிற்காக காலை முதலே அரசியல் கட்சி தலைவர்களும், நடிகர்களும் வாக்களித்து வருகின்றனர்.

இந்நிலையில், நடிகர் ரஜினிகாந்த் சென்னை ஸ்டெல்லா மேரிஸ் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடியில் தனது வாக்கைப் பதிவு செய்தார்.

முன்னதாக, நடிகர் சிவகாத்திகேயன் தனது மனைவியுடன் வந்து வாக்களித்தார். நடிகர் கார்த்திக், பிரபு, விக்ரம் பிரபு உள்ளிட்டோர் வாக்களித்தனர்.

அதைத்தொடர்ந்து நடிகர் விஜய் சென்னை திருவான்மியூரில் உள்ள வாக்குசாவடியில் அலையென திரண்ட மக்களுக்கு மத்தியில் வாக்களித்தார். நடிகர் சூர்யா, கார்த்திக், சிவகுமார் குடும்பத்துடன் வந்து வாக்களித்தனர்.

நடிகர்களான விக்ரம், விஜய் சேதுபதி, செல்வ ராகவன், தனுஷ், வெற்றி மாறன் ரத்ன குமார், கமல்ஹாசன், திரிஷா, ஹரிஷ் கல்யாண் மற்றும் பலர் அவர்களின் ஜனநாயக கடமையைச் செய்தனர்.

# வாக்களிக்கச் சென்ற மூவர் மயங்கி விழுந்து உயிரிழப்பு

சென்னை, ஏப். 19

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள 40 தொகுதிகளில் நாடாளுமன்ற தேர்தலுக்கான வாக்குப்பதிவு இன்று காலை 7 மணி முதல் தொடங்கி நடைபெற்று வருகிறது. வாக்குப்பதிவு தொடங்கியது முதலே அரசியல் கட்சி தலைவர்கள், திரை பிரபலங்கள், பொது மக்கள் என பலரும் ஆர்வத்துடன் வந்து தங்களது வாக்கினை பதிவு செய்து வருகின்றனர்.

இந்த நிலையில், சேலம் மாவட்டத்தில் வாக்களிக்க சென்ற இருவர் வாக்குச்சாவடி மையத்தில் மயங்கி விழுந்து பரிதாபமாக உயிரிழந்தனர். கெங்கவல்லி அருகே செந்தாரப்பட்டி ஊராட்சி தொடக்கப்பள்ளி வாக்குச்சாவடி மையத்தில் வாக்களிக்கச் சென்ற சின்ன பொண்ணு (வயது 77) என்ற மூதாட்டி மயங்கி விழுந்து உயிரிழந்தார்.



அதைபோல சேலம் மாநகராட்சி நடுநிலைப்பள்ளி வளாகத்தில் சூரமங்கலம் பகுதியை சேர்ந்த பழனிசாமி (வயது 65) தனது மனைவியுடன் வாக்களிக்கச் சென்றபோது மயங்கி விழுந்து உயிரிழந்தார். இதையடுத்து பாதுகாப்பு பணியில் இருந்த பொலிஸார் இருவரின் உடலை மீட்டு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

அதனை தொடர்ந்து திருத்தணியை அடுத்த நெமிலி கிராமத்தைச் சேர்ந்த கனகராஜ் (வயது 59) என்ற முதியவர் வாக்குச் செலுத்த வரிசையில் காத்திருந்தபோது திடீரென மயங்கி விழுந்து உயிரிழந்தார். இதையடுத்து அருகில் இருந்தவர்கள் அவரின் உடலை மீட்டு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.



# ஜப்பானியர்களை இலக்கு வைத்து கராச்சியில் தற்கொலைத் தாக்குதல்

## குண்டு துளைக்காத வாகனத்தில் பணித்தமையால் அனைவருமே தப்பிப் பிழைத்தனர் எனவும் தகவல்

கராச்சி,ஏப்.19

பாகிஸ்தானின் கராச்சி நகரின் கிளிப்டன் பகுதியில் உள்ள குடியிருப்பில் தங்கியிருந்த ஜப்பான் நாட்டவர்கள் 5 பேர், இன்று காலையில் ஏற்றுமதி மண்டலம் நோக்கி வேனில் சென்று கொண்டிருந்தனர். அவர்களின் பாதுகாப்பிற்காக தனியார் பாதுகாவலர்கள் 2 பேர் சென்றனர். புறநகர்ப் பகுதியான லண்டியில் உள்ள முர்தசா சோரங்கி அருகே சென்றபோது, பைக்கில் வந்த இரண்டு பயங்கரவாதிகள் வழிமறித்து, வானில் மோத முயன்றனர்.

இதனால் சுதாரித்த பாதுகாவலர்கள், பயங்கரவாதிகளை நோக்கித் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதில் ஒரு பயங்கரவாதி உயிரிழந்தான். மற்றொரு பயங்கரவாதி, வான் அருகே சென்று தனது உடலில் கட்டியிருந்த வெடி குண்டை வெடிக்க செய்தான். இந்தச் சம்பவத்தால் அப்பகுதியில் கடும் புகைமூட்டம் எழுந்தது. இந்த தாக்குதலில் ஜப்பானியர்கள் அதிர்ஷ்டவசமாக உயிர்தப்பினர். தாக்குதலுக்கு எந்த அமைப்பும் பொறுப்பேற்கவில்லை

இதுபற்றி காவல்துறை உயர் அதிகாரி கூறுகையில், “பயங்கரவாதிகள் நடத்திய தற்கொலை தாக்குதலில் ஜப்பானியர்களுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை. அவர்கள் பயணம் செய்த வான், குண்டு துளைக்காத வாகனம் என்பதால் குண்டுவெடிப்பினால் சேதமடையவில்லை. பாதுகாவலர் ஒருவருக்குக் காயம் ஏற்பட்டது” என்றார்.

# வான் பாதுகாப்புச் சாதனங்களை பயன்படுத்த ஆரம்பித்தது ஈரான்!

எதிரிகளின் ஆயுதங்கள் மற்றும் விமானங்களை கண்டறிந்து பதில் ஏவுகணைகளை வீசி அழிக்கும் வான் பாதுகாப்பு சாதனங்களை ஈரான் பயன்படுத்தத் தொடங்கி உள்ளது.



சிரியாவில் உள்ள ஈரான் தூதரகம் தாக்கப்பட்டதற்கு பதிலடியாக, கடந்த சனிக்கிழமை இஸ்ரேல் மீது ஈரான் தாக்குதல் நடத்தியது. ஈரான் நாட்டில் இருந்து ஏராளமான ஏவுகணைகள், ஆளில்லா விமானங்கள் பாய்ந்த நிலையில், இந்தத் தாக்குதலை இஸ்ரேல் தனது வான் பாதுகாப்பு சாதனங்கள் மூலம் முறியடித்தது. இந்த தாக்குதலானது, இரு நாடுகளுக்கிடையே போர் பதற்றத்தை அதிகரித்துள்ளது. ஈரானுக்கு பதிலடி கொடுக்கப்படும் என இஸ்ரேல் தரப்பில் எச்சரிக்கை செய்யப்பட்டது.

இந்நிலையில், இன்று ஈரான் மீது இஸ்ரேல் ஏவுகணைகளை வீசி பதில் தாக்குதல் நடத்தியிருப்பதாக உள்ளூர் ஊடகங்களில் செய்தி வெளியானது. ஈரானின் இஸ்பஹான் நகரில் உள்ள விமானப்படை தளத்தில் இருந்து சத்தம் கேட்டதாக அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்த தாக்குதல் உறுதி செய்யப்படவில்லை. எனினும், வான் பாதுகாப்பு நடவடிக்கைகளை ஈரான் தீவிரப்படுத்தி உள்ளது. ஈரானின் மேற்கு பகுதியில் வான்வெளி மூடப்பட்டுள்ளது. பல விமானங்கள் திருப்பிவிடப்பட்டு உள்ளன.

அத்துடன், எதிரிகளின் ஆயுதங்கள் மற்றும் விமானங்களை கண்டறிந்து பதில் ஏவுகணைகளை வீசி அழிக்கும் வான் பாதுகாப்பு சாதனங்களை ஈரான் பயன்படுத்தத் தொடங்கி உள்ளது. மத்திய நகரமான இஸ்பஹான் அருகே உள்ள ஒரு பெரிய விமானத் தளம் மற்றும் அணுமின் நிலைய வளாகத்தில் இருந்து வான் பாதுகாப்பு சாதனங்கள் இயக்கப்பட்டு, அதில் இருந்து சிக்னல்கள் வெளிப்பட்டன.

இன்று அதிகாலையில் ஆளில்லா விமானங்கள் பறந்ததாக வெளியான செய்திகளால் பல மாகாணங்களில் வான் பாதுகாப்பு சாதனங்கள் இயக்கப்பட்டன என அரசு தொலைக்காட்சி தெரிவித்துள்ளது.

பக்கங்கள் - 5

கனடா முரசு

வெள்ளிக்கிழமை 19/04/2024

## அல்பேர்ட்டாவில் அதிக காட்டுத் தீ சம்பவங்கள்

அல்பேர்ட்டா, ஏப்ரல் 19

அல்பேர்ட்டா காட்டுத் தீ சம்பவங்கள் அதிகரித்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. C2▶




# 400 கிலோ தங்கம் சூறையாடப்பட்ட வழக்கில் தமிழர் மீதும் குற்றச்சாட்டு

கடந்த ஆண்டு கனடாவை உலுக்கிய 24 மில்லியன் டொலர் தங்கம் சூறையாடப்பட்ட சம்பவத்துடன் தமிழர் ஒருவருக்கு தொடர்பு உண்டு எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ரொறன்ரோ பியர்சன் விமான நிலையத்தில் கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் 400 கிலோ கிராம் எடையுடை தங்கம் மற்றும் வெளிநாட்டு நாணயம் என்பன சூறையாடப்பட்டன.

சுவிட்சர்லாந்தின் சூரிச்சிலிருந்து அனுப்பி வைக்கப்பட்ட தங்கம் விமான நிலைய களஞ்சியச் சாலையிலிருந்து மாயமானது.

இந்த சம்பவம் கனடாவை மட்டுமன்றி உலக அளவில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. இந்த விடயத்தில் பிரம்டனை சேர்ந்த 35 வயதான பிரசாத் பரமலிங்கம் என்ற தமிழர் மீதும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. C2▶

# 400 கிலோ தங்கம் சூறையாடப்பட்ட சம்பவம் பற்றிய விசாரணை தொடரும்

## பொலிஸ் பிரதானி நிசான் துரையப்பா தெரிவிப்பு

400 கிலோ கிராம் எடையுடைய தங்கம் மற்றும் வெளிநாட்டு நாணயங்கள் என்பன சூறையாடப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணைகள் தொடரும் என பீல் பிராந்திய பொலிஸ் பிரதானி நிசான் துரையப்பா தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவம் சமூகத்தில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியதாகவர் தெரிவித்துள்ளார்.

விரிவான விசாரணைகளின் மூலம் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர் என்றார் அவர்.

இந்தக் கொள்ளைச் சம்பவம் தொடர்பிலான உண்மைகளை வெளிப்படுத்த நடவடிக்கை எடுத்த விசாரணையாளர்களின் பங்களிப்பு பாராட்டுக்குரியது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தக் கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்களை அடையாளம் காணவும் கைது செய்யவும்





உதவியவர்கள் மற்றும் ஏனைய சட்டத்துறை சார்ந்தவர்களையும் பாராட்டுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, இந்த கொள்ளைச் சம்பவம் எயார் கனடா விமான சேவை நிறுவனத்தில் பணியாற்றியவர்களின் உதவியுடன் மேற்கோள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சர்வதேச துப்பாக்கி கடத்தல் கும்பலுக்கும் இந்தச் சம்பவத்திற்கும் தொடர்பு உண்டு என தெரிவிக்கப்படுகின்றது.

சுமார் 20 மில்லியன் டொலர் பெறுமதியான தங்கமும் 2.5 மில்லியன் டொலர் பெறுமதியான வெளிநாட்டு நாணயங்களும் இவ்வாறு சூறையாடப்பட்டுள்ளன.




# டொறன்டோச் சுற்றாடலை விட்டு வெளியேறி வேறிடங்களுக்குச் செல்வதற்கு பலர் முஸ்தீபு

## வீட்டு வாடகைப் பிரச்சினையால் நெருக்கடி

வீட்டு வாடகைப் பிரச்சினையால் டொறன்டோ மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் வசிக்கும் பலர் வேறும் இடங்களுக்கு செல்ல முயற்சிக்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

டொறன்டோவில் இரண்டு படுக்கை அறைகளைக் கொண்ட வீடு ஒன்றின் சராசரி வாடகைத் தொகை மூவாயிரம் டொலர்களாகும்.

இவ்வாறான ஓர் பின்னணியில் நகரை விட்டு வெளியேறுவதற்கு சுமார் 60 வீதமான வாடகைக் குடியிருப்பாளர்கள் எத்தனித்து வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 2016ஆம் ஆண்டு முதல் 2021ஆம் ஆண்டு வரையிலான காலப் பகுதியில் டொறன்டோவில் வீட்டு வாடகைத் தொகை 30 வீதத்தினால் உயர்வடைந்துள்ளது.

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, வீட்டு மனைகளின் விலை உயர்வு மற்றும் வாடகைத் தொகை அதிகரிப்பு போன்ற காரணிகளினால் டொறன்டோவில் குடியிருப்போர் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# எரிபொருள் விலை அதிகரிப்பு முதல்வர் டக் ஃபோர்ட் கவலை

ஒன்ராரியோ, ஏப்ரல் 19

ஒன்ராரியோ எரிபொருள் நிலையங்களில் எரிபொருள் விலை அதிகரிப்பு தொடர்பில் முதல்வர் டக் ஃபோர்ட் கவலை வெளியிட்டுள்ளார்.

கடந்த இரண்டு வருடங்களில் இல்லாதவாறு டொரன்டோ பெருநகரப் பகுதியில் எரிபொருள் விலை அதிகரித்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

புதன்கிழமை நள்ளிரவுடன் எரிபொருள் விலையானது 14 சதங்களால் அதிகரிப்பைக் கண்டது. அதனடிப்படையில், தற்போது எரிபொருள் விலை ஒரு லீற்றருக்கு 179.9 சதமாக உள்ளது.

கோடை காலத்திற்கு எரிபொருளை மேம்படுத்துவதற்காக எரிபொருள் விலை அதிகரிப்பதாக கூறும் எரிபொருள் நிறுவனங்களின் செயல் அருவருக்கத்தக்கதாக இருப்பதாக டக் ஃபோர்ட் கூறியுள்ளார்.




அமெரிக்காவில் எரிபொருள்களின் விலை அதிகரிக்கப்படாத நிலையில், கனடாவில் அதிகரித்திருப்பதற்கான காரணங்களை வெளிப்படுத்துமாறு அவர் கோரியுள்ளார்.

### 400 கிலோ...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய 12 பேருக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ஆயுத கொள்ளை, கொள்ளைச் சூழ்ச்சித் திட்டத்திற்கு உதவியமை, பங்களிப்பு வழங்கியமை ஆகிய குற்றச்சாட்டுக்கள் பிரசாத் பரமலிங்கம் மீது சுமத்தப்பட்டுள்ளன.

65 ஆயுதங்களை கொள்வனவு செய்ய பிரசாத் பரமலிங்கம் நிதி உதவி வழங்கினார் என அமெரிக்க பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இந்த ஆயுதங்கள் புளொரிடா மற்றும் ஜோர்ஜியா ஆகிய மாநிலங்களில் கொள்வனவு செய்யப்பட்டிருக்கலாம் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடைய சாரதியான 25 வயதான கிங் மெக்லேனே, ஆயுதங்களைக் கடத்திய வாகனத்தையும் செலுத்தியுள்ளார்.

### அல்பேர்ட்டாவில்...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வெப்பநிலை அதிகரிப்பின் காரணமாக காட்டுத் தீ ஆபத்தும் அதிகரித்துள்ளதாக அல்பேர்ட்டா வனவிலங்கு திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

2024இல் இதுவரை, 2023ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது அதிகளவு காட்டுத் தீ சம்பவங்கள் பதிவாகியுள்ளன என அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

50 காட்டுத்தீ தற்போது எரிந்து கொண்டிருப்பதாகவும், கடந்த வருடத்தின் தொடர்ச்சியாக 64 காட்டுத்தீ எரிந்து கொண்டிருப்பதாகவும், இந்த வருடத்தின் ஏப்ரல் 18ஆம் திகதி வரை 150 காட்டுத் தீ சம்பவங்கள் பதிவாகியிருக்கின்றன எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

2023ஆம் ஆண்டின் இந்த காலப் பகுதியில் 85 காட்டுத் தீ சம்பவங்களே பதிவாகியிருந்தன என வனவிலங்குத் திணைக்களம் தெரிவிக்கின்றது.



# ட்ரோன்கள் மூலம் சிறைக்குப் பொருள்கள் அனுப்பப்படுவதைத் தடுக்க நடவடிக்கை!

## பிரிட்டிஷ் கொலம்பியாவில் ஏற்பாடாம்

பிரிட்டிஷ் கொலம்பியா, ஏப்ரல் 19

சிறைச்சாலைகளுக்கு ட்ரோன்களைப் பயன்படுத்தி பொருள்கள் அனுப்பப்படுவதைத் தடுக்க தீவிர நடவடிக்கை எடுத்துள்ளதாக பிரிட்டிஷ் கொலம்பியாவின் சிறைச்சாலைகள் சேவை தெரிவித்துள்ளது.

இதன்காரணமாக பிரிட்டிஷ் கொலம்பியா சிறைச்சாலைகளில் வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

சிறைச்சாலைகளுக்கு ட்ரோன்கள் பறப்பதனை கண்டறிந்து தடுக்கும் உபகரணங்களைப் பொருத்தப் போவதாக சிறைச்சாலைகள் சேவை தெரிவித்துள்ளது.

இலத்திரனியல் உபகரணங்களை கண்டறியக் கூடிய வகையில் பயிற்சிப் பெற்ற நாய்களும் பயன்படுத்தப் படவுள்ளன எனச் சிறைச்சாலைகள் சேவையின் அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது.



# கன்சர்வேட்டிவ் கட்சியின் தலைவர் பியர் பொலிவர் ஒரு மோசடிக்காரர்

## தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் குற்றச்சாட்டு

ஒன்ராரியோ,ஏப்ரல் 19

கன்சர்வேட்டிவ் தலைவர் பியர் பொலிவர் ஒரு மோசடிக்காரர் என கனடாவின் தொழிலாளர் காங்கிரஸ் தலைவரான பீ புருஸ்க் தெரிவித்துள்ளார்.

பியர் பொலிவரின் உண்மை முகத்தை அடுத்த நாடாளுமன்ற தேர்தலுக்கு முன்னர் வெளிக்கொணர்வதற்கு தொழிற்சங்கங்கள் அனைத்தும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கனடாவின் மிகப்பெரிய தொழிலார்கள் அமைப்பான தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

2025ஆம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தல் தொடர்பில் கலந்துரையாடுவதற்கான ஒட்டாவாவில் தொழிற்சங்கத் தலைவர்கள் சந்தித்த போதே புருஸ்க் இவ்வாறு கூறியுள்ளார்.

போலிவர் இப்போது தொழிலாளர் நலன் குறித்து கருத்து தெரிவித்தாலும், கடந்த 20 வருடங்களாக தொழிலாளர் நலன்களுக்கு எதிராகவே செயற்பட்டு வந்தார் என புருஸ்க் சுட்டிக்காட்டியுள்ளார்.



# ஒன்ராரியோ, அல்பேர்ட்டாவினுடைய மேடிஸ் கட்டமைப்பு குறித்து விளக்கம்

ஒன்ராரியோ,ஏப்ரல் 19

சுய-அரசாங்கம் என்கிற வழியிலேயே ஒன்ராரியோ மற்றும் அல்பேர்ட்டாவின் மேடிஸ் நிறுவனங்கள் இருக்கும் என அறிவித்துள்ளது.

அல்பேர்ட்டாவிலும், ஒன்ராரியோவிலும் மாகாணத்தில் மேடிஸ் அரசாங்கங்களை அங்கீகரிக்கும் மத்திய அரசாங்கத்தின் சட்டத்தில் இருந்து விலகிக் கொள்வதாக சசகெச்சுவானின், மேட்டிஸ் பூர்வீகக் குடியினர் ஏப்ரல் 17ஆம் திகதி அறிவித்திருந்தனர்.

மத்திய அரசாங்கத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட சட்டமூலம் திருப்திகரமானதாக இல்லாமையால் தமது உறுப்பினர்கள் இதில் இருந்து பின்வாங்குவதற்கு தீர்மானித்தனர் என சசகெச்சுவானின், மேட்டிஸ் பூர்வீகக் குடியின தலைவர் கிளென் மெக்கலம் தெரிவித்துள்ளார்.

இந்த சட்டமூலத்திற்கு பூர்வீகக் குடியினர் பேரவையும், கல்வியியலாளர்களும் பெரும் எதிர்ப்பு வெளியிட்டிருந்தனர்.

எனினும், ஒன்ராரியோ மற்றும் அல்பேர்ட்டாவின் பூர்வீகக் குடியினர் சட்டமூலத்திற்கு ஆதரவாக நின்றிருந்தனர்.

இந்த சட்டமூலத்திலிருந்து பின்வாங்கினாலும், புதிய தனியான சுய அரசாங்க கட்டமைப்பு ஒன்றினை சசகெச்சுவானுக்கு உருவாக்குவதற்கு அரசாங்கத்துடன் தொடர்ந்து இணைந்து செயற்படவுள்ளதாக மெக்கலம் கூறியுள்ளார்.




# பூங்காக்களில் மது அருந்த அனுமதிப்பதற்கு ஆதரவு!

ஒன்ராரியோ, ஏப்ரல் 19

பல பூங்காக்களில் மது அருந்துவதனை நிரந்தரமாக்குதலை அனுமதிக்கும் நிகழ்ச்சிக்கு டொரன்டோ நகர சபை உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களித்துள்ளனர்.

19 வயதுக்கு மேற்பட்டவர்கள் பூங்காக்களில் மது அருந்துவது தொடர்பான பரீட்சார்த்த நிகழ்ச்சிக்கு பொது மக்கள் மத்தியில் எவ்வித மறுப்பும் இல்லாத நிலையில், அதனை நிரந்தரமாக்குவதற்கு பெரும்பாலான நகர சபை உறுப்பினர்கள் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

மது அருந்துவதற்கு அனுமதிக்கப்பட்டிருந்த பரீட்சார்த்த பூங்காவிற்கு விஜயம் செய்த 92 சதவீதமானவர்கள், இந்த விஜயத்தின் போது தாம் திருப்தியடைவதாகவும், 90 சதவீதமானவர்கள் பாதுகாப்பானதாகவும் தெரிவித்திருந்தனர்.




# 2 வயதுப் பெண் சிசு மரணம் சந்தேகத்தில் ஒருவர் கைது

அல்பேர்ட்டா, ஏப்ரல் 19

இரண்டு வயது பெண் குழந்தையின் மரணம் தொடர்பில் ஆண் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளதாக கல்கரி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

2022ஆம் ஆண்டு செப்ரம்பர் மாதத்தில் இரண்டு வயதுக் குழந்தையான ஒலிவியா ஹேய்டன் அவசர சிகிச்சைப் பிரிவுக்கு கொண்டு வரப்பட்டு, சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்தது.

பிரேத பரிசோதனை மற்றும் தொடர்ச்சியான பொலிஸ் விசாரணைகளின் பின்னர் இது ஒரு கொலை என பொலிஸார் கண்டறிந்தனர்.

அதனடிப்படையில், 45 வயதான வின்ஸ்டன் கெம்பல் ஏப்ரல் 17ஆம் திகதி கைதுசெய்யப்பட்டுள்ளார்.




# எட்டோபிகொக் பகுதியில் கத்திக்குத்தில் ஒருவர் பலி

ஒன்ராரியோ, ஏப்ரல் 19

எட்டோபிகொக் பகுதியில் இடம்பெற்ற கத்திக்குத்து சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணகளை ஆரம்பித்துள்ளனர்.

நேற்று ஏப்ரல் 18ஆம் திகதி இடம்பெற்ற இந்த சம்பவத்தில் ஆணொருவர் உயிரிழந்துள்ளார்.

சம்பவ இடத்திற்கு பொலிஸார் சென்ற போது, உயிருக்கு ஆபத்தான காயங்களுடன் ஒருவர் இருந்தார் எனவும், பின்னர் அவர் உயிரிழந்ததார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பில் அதே வீட்டில் வசித்து வந்த இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# மிசிசாகாவில் நேற்று நபரொருவர் தொழிற்சாலை விபத்தில் காயம்

ஒன்ராரியோ, ஏப்ரல் 19

மிசிசாகாவில் தொழிற்சாலை ஒன்றில் இடம்பெற்ற விபத்தில் நபரொருவர் காயமடைந்து, வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.




ட்ரிவ் ரோட் மற்றும் பிரமலியா ரோட் அருகில் நேற்று ஏப்ரல் 18ஆம் திகதி காலை 7 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்துக்கான காரணம் தொடர்பில் இதுவரை எவ்வித தகவல்களும் வெளியாகவில்லை.

